# பேரூராட்சிகளின் செயல்பாடுகள் குறித்த விளக்கங்கள்

தமிழகத்திலுள்ள அனைத்து பேரூராட்சி மன்றத் தலைவர்களுக்கும் வாழ்த்துக்கள். பேரூராட்சியின் நிர்வாக அமைப்புகள், செயல்பாடுகள் முதலியவற்றை அறிந்து பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும் என்ற அக்கறையுடன் இவ்வியக்ககக் குறிப்புகள் தயாரிக்கப்பட்டுள்ளது. இதில் சட்டங்களின் சுருக்கங்கள் மட்டுமே தரப்பட்டுள்ளது. விரிவான விளக்கத்திற்கு சம்பந்தப்பட்ட சட்டங்கள்/நடைமுறை நூல்களை சரிபார்த்து பின்பற்ற வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகிறது. தமிழகத்திலுள்ள 561 பேரூராட்சிகளும் மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியர்/ உதவி இயக்குநர் மற்றும் மாநில அளவில் பேரூராட்சிகளின் இயக்குநரகத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. பேரூராட்சிகள் இயக்ககம், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் துறையின் நிர்வாக கட்டுப்பாட்டில் செயல்படுகிறது.

2001ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 561 பேரூராட்சிகளின் மக்கள் தொகை 76,46,386 ஆகும். இப்பேரூராட்சிகளில் 19,66,671 குடும்பங்கள் உள்ளன. இதில் 4,79,804 குடும்பங்கள் வறுமைக்கோட்டிற்கு கீழே வாழும் குடும்பத்தினர் ஆவர்.

பேரூராட்சிகள் நான்கு நிலைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| நிலை 2 | - | 82 பேரூராட்சிகள் |
| நிலை 1 | - | 221 பேரூராட்சிகள் |
| தேர்வுநிலை | - | 245 பேரூராட்சிகள் |
| சிறப்புநிலை | - | 13 பேரூராட்சிகள் |



தரணி போற்றும் தமிழகத்தில், மக்களாட்சி தழைத்தோங்கும் விதத்தில் இந்திய அரசியலமைப்புச் சட்ட திருத்தம் 74-ன்படி, பெண்களுக்கு 33% பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டுள்ளது. மிகையான அதிகாரங்கள் உள்ளாட்சிக்கு அளிக்கப்பட்டுள்ளது. 73 மற்றும் 74வது அரசியலமைப்பு திருத்தங்களுக்குப் பிறகு உள்ளாட்சி மன்றங்கள் அரசியலமைப்பு நிறுவனங்கள் (Constitutional Bodies) என்ற உயரிய மதிப்பை பெற்றுள்ளன. எனவே, தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அனைத்து பேரூராட்சி மன்றத் தலைவர்களும் தத்தம் பொறுப்புகளை உணர்ந்து, மக்களின் எதிர்பார்ப்பினை கருத்தில் கொண்டு திட்டங்கள் தீட்டி சிறப்பாக நிறைவேற்ற கடமைப்பட்டவர்களாவார்கள்.


## பேரூராட்சி மன்றங்கள்

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920-ன்படி பேரூராட்சிகளின் நிர்வாகம் செயல்படுகிறது. அரசாணை எண். 55 நகராட்சிகள் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 14.07.2006-ன்படி சிறப்பு சிற்றூராட்சிகள் என்பதை மீண்டும் பேரூராட்சிகள் என வகைபடுத்தப்பட்டது. ஏனெனில் பேரூராட்சிகள், ஊராட்சிகள் மற்றும் நகராட்சிகளுக்கு இடைப்பட்ட அமைப்பாக விளங்கினாலும், பேரூராட்சிகளில் மக்கள் தொகை 5000க்கு அதிகமாகவும், 30,000 வரையிலும் உள்ளனர். அநேக பேரூராட்சிகள் தாலுக்கா தலைமையிடமாகவும், ஊராட்சி ஒன்றிய அலுவலகம், பதிவுத்துறை அலுவலகம், வரலாற்று சிறப்பு மிக்க நகரங்கள், வழிபாட்டு தலங்களாகவும், தொழிலகங்கள் நிறைந்ததாகவும், கல்வி நிலையங்கள் நிறைந்தும் விளங்குவதால், நகரங்களுக்குரிய அனைத்து அம்சங்களும் ஒருங்கே பெற்று வளர்ச்சிப் பாதையில் முன்னேறிக் கொண்டிருப்பதை அனைவரும் அறிவோம்.

| | | |
|---|---|---|
| பேரூராட்சிகளின் எண்ணிக்கை | - | 561 |
| மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை | - | 8,807 |

## தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920-ன் நோக்கங்களும் சிறப்பம்சங்களும்:

- பிரிவு 124-ன் அட்டவணை IV-ல் சட்டநோக்கங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.
- மக்களின் (உள்ளூர்) பாதுகாப்பு
- பொதுச்சுகாதாரம்
- சௌகரியங்கள்
- வசதிகள்
- நிர்வாகத்திற்குத் தேவையான இடைநிகழ்வுகள்




### அட்டவணை IV-இல் 39 முதல் 53 முடிய உள்ள விதிகளின்படி மேற்கொள்ள வேண்டிய பணிகள் பின்வருமாறு :

- பொதுச்சுகாதாரம் - துப்புரவு, கழிவுநீர் அகற்றல், கழிப்பறை வசதி, திடக்கழிவு மேலாண்மை
- மக்கள் உடல் நலம் மற்றும் நோய்த்தடுப்பு (மருத்துவ வசதி உட்பட)
- குடிநீர் வழங்கல் (குடிநீர் மற்றும் பிற பயன்பாடு)
- விளக்கு வசதி
- சாலை வசதி
- தெருக்கள் அமைத்தல், பராமரிப்பு
- பொதுச் சொத்துக்கள் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு



- கட்டிடங்கள் கட்டுவதை ஒழுங்கு செய்தல்
- தொழிற்சாலைகள் மற்றும் தொழில்கள் ஏற்படுத்துவதை உரிமம் வழங்கி முறைப்படுத்தல்
- பிறப்பு இறப்பு பதிவு
- மயானங்கள் ஏற்படுத்தி பராமரித்தல்.



### குடிநீர் வழங்கல்:

ஐக்கிய நாடுகளின் அமைப்பிலுள்ள உலக சுகாதார நிறுவனத்தின் பரிந்துரையின்படி நபர் ஒருவருக்கு நாளொன்றுக்கு 70 லிட்டர் தண்ணீர் வழங்கப்படலாம். ஆனால் இந்த அளவீட்டினை நடைமுறைப்படுத்துவதில் நீர் ஆதாரங்கள் ஏற்புடையவையாக அமையாததால் அனைத்து பேரூராட்சிகளிலும் அமலாக்கம் செய்ய இயலவில்லை. இருப்பினும், இவ்விலக்கினை அடைய அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குறிப்பாக இந்திய அரசின் ஜவகர்லால் நேரு தேசிய புனரமைப்பு திட்டம் (JNNURM), சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புற உள்கட்டமைப்பு வளர்ச்சித் திட்டம் (UIDSSMT) ஆகிய திட்டங்களின் மூலம் தண்ணீர் வழங்கல் பணிக்கு முன்னுரிமை அளித்து திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- நிர்ணயிக்கப்பட்ட அளவான-தினசரி தனிநபர் அளவான 70 லிட்டருக்கு குறையாமல் குடிநீர் வழங்குதலை உறுதி செய்தல்.
- குடிநீர் ஆதாரங்களை நன்கு பராமரித்தல்.
- குடிநீர் பகிர்மானக் குழாய்களை நன்கு பராமரித்தல் மற்றும் பழுதுகளை உடனுக்குடன் நீக்கம் செய்தல்.

- மேல்நிலை/தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிகளை பதினைந்து நாட்களுக்கொருமுறை சுத்தம் செய்தல் மற்றும் அதற்குரிய விவரங்களை பதிவு செய்தல்.
- குளோரின் கலத்தல் மற்றும் அதற்குரிய சோதனை செய்தல்.
- மழைநீர் சேகரிப்புத் திட்டம் முழுமையாக அமலாக்கப்பட வேண்டும்.
- நீர்நிலைகள் ஆழப்படுத்தப்பட்டு, பராமரிக்கப்பட வேண்டும்.
- கழிவுநீர் மற்றும் நீராதாரங்களை மாசுபடுத்துவதைத் தவிர்க்க கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டு (தேவையினடிப்படையில்) பராமரிக்கப்பட வேண்டும்.
- குடிநீர்க் குழாய் இணைப்புகள் வழங்கும் போது, நீர் அளிக்கும் அளவினை கணக்கில் கொள்ள வேண்டும்.
- அங்கீகரிக்கப்பட்ட துணை விதிகளை தவறாமல் கடைப்பிடிக்க வேண்டும்.
- குடிநீர் கட்டணம் நிலுவையின்றி வசூலிக்க வேண்டும். மூன்று மாத நிலுவை தொடர்ந்தால் குழாய் இணைப்பு துண்டிக்கப்படலாம்.
- அனுமதியற்ற குழாய் இணைப்புகளை கட்டாயம் தவிர்த்தல் வேண்டும்.
- குடிநீர்க் குழாய் பராமரிப்புப் பணிகள் மாவட்ட நுகர்வுக் குழுவால் நிர்ணயிக்கப்பட்ட விலைவீதத்திலேயே வேலைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
- குடிநீர் வழங்கல் திட்டங்கள், பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம் ஆகியவை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமப் பகுதியிலுள்ள (C.M.D.A.)



20 பேரூராட்சிகளுக்கு மட்டும் சென்னைக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரியத்தால் (CMWSSB) மேற்கொள்ளப்பட வேண்டும். எனவே, புறநகர்ப் பகுதியிலுள்ள பேரூராட்சிகளுக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் மேற்கொள்ளப்படவேண்டும்.

- தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் அளிக்கப்பட்ட விபரத்தின்படி, பின்வரும் அளவீடுகள் உள்ள குடிநீர் குடிப்பதற்கு உகந்ததாகும் :

| | | |
|---|---|---|
| மொத்தம் கரைந்துள்ள உப்பு | - | 2000 மிகி/லி |
| கடினத் தன்மை | - | 600 மிகி/லி |
| புளோரைடு | - | 1.5 மிகி/லி |
| நைட்ரேட் சால்ட் | - | 45 மிகி/லி |
| இரும்பு உப்பு | - | 1.00 மிகி/லி |
| கிருமி நாசினிக்காக பிளீச்சிங் பவுடர் கலந்தபின் குறையாமல் இருக்க வேண்டிய குளோரின் அளவு. | - | 0.2 மிகி/லி |

நோய்க்கிருமிகள் இருக்கக்கூடாது.


- மாவட்ட தலைநகரங்கள்தோறும் உள்ள தமிழ்நாடு குடிநீர் வடிவால் வாரிய ஆய்வுக்கூடங்களில் குடிநீர் பரிசோதனை செய்து கொள்ளலாம்.
- குடிநீர் தொடர்பான சந்தேகங்களுக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைமை குடிநீர் பகுப்பாளர் மூலம் தொலைபேசியில் தெளிவு பெறலாம்-044-28412098.

## சுவர்ண ஜெயந்தி சகாரி ரோஜ்கார் யோஜனா திட்டம் (SJSRY)

- பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மத்திய அரசு மாநில அரசு நிதி உதவியின் கீழ் முறையே 75 : 25 வீதத்தில் பேரூராட்சியில் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.
- இதில் சுய வேலைவாய்ப்புத் திட்டம் மற்றும் கூலி வேலைவாய்ப்புத் திட்டம் ஆகிய இரு திட்டங்கள் மூலம் செயல்படுத்தப்படுகிறது.
- சுய வேலைவாய்ப்புத் திட்டத்தில் அதிகபட்ச திட்ட மதிப்பீடு ரூ. 50,000/- வரை அனுமதிக்கப்படும். இதில் 80% வங்கிக் கடன், 15% மானியம், 5% பயனாளி பங்கீட்டுத் தொகையாகும்.

### நகர்ப்புற கூலி வேலைவாய்ப்புத் திட்டம் :

- வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள ஏழைத் தொழிலாளர்களைக் கொண்டு பேரூராட்சிகளுக்கு அசையாச் சொத்து உருவாக்கப்படலாம். இதில் மத்திய மாநில அரசு மானியமாக 75 : 25 வீதத்தில் வழங்கப்படும்.
- திட்ட மதிப்பீட்டில் பொருட்கள் கிரயம் மற்றும் கூலி ஆகியவற்றின் விகிதாச்சாரம் 60 : 40 வீதத்தில் செயல்படுத்த வேண்டும்.




### தெருவிளக்குகள் பராமரிப்பு :

- மக்கள் அதிகம் கூடும் இடங்களில் மட்டும் சோடியம் ஆவிவிளக்குகள் அமைக்க அனுமதிக்கலாம்.
- தெருவிளக்குகள் மாற்றம் செய்யும் போது அரசால் நிர்ணயிக்கப்பட்ட கால இடைவெளி கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டும்.



- மின்சிக்கனம் கடைப்பிடிக்க தானியங்கி சுவிட்சுகள் அமைக்கப்பட்டு செலவினம் கட்டுப்படுத்தலாம்.
- மின்கட்டணத்தை கட்டுப்படுத்த மின்சக்தி தணிக்கை (Energy Audit) மேற்கொள்ள வேண்டும்.
- மின்கம்பங்களின் பதிவேடு பராமரிக்க வேண்டும்.
- மின் சாதனங்கள், அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தர்கள் மூலம் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் அடிப்படையில் இறுதி செய்ய வேண்டும்.



### பொது சுகாதார பராமரிப்பு :
### திடக்கழிவு மேலாண்மை திட்டம் :

- குப்பைகள் உருவாகும் இடத்திலேயே பிரிப்பது, அவற்றைக் குப்பை கிடங்குகளுக்குக் கொண்டு செல்வது, பிறகு பாதுகாப்பான முறையில் குப்பைகளை அழிப்பது மற்றும் குப்பைகளிலிருந்து திரும்பப் பயன்படுத்தக்கூடிய பொருட்களைத் தயாரிக்கக்கூடிய பொருள்களைத் தனியாக பிரிப்பது (Waste recycling) போன்ற அம்சங்கள் உண்டு.
- வீடுகளிலேயே திடக்கழிவுகளைப் பிரித்து சேகரம் செய்யப்படுகின்றன.
- குப்பையகற்றுதல் பற்றியும், சுற்றுப்புற சுகாதாரம் குறித்தும் தெருக்களில் அசுத்தம் செய்வதை தடுக்கவும், பயன்படுத்திய பிளாஸ்டிக் கழிவுப் பொருள்களைத் தெருக்களில் வீசி எறிவதை தடுக்கவும் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த உள்ளாட்சி அமைப்புகள் பயன்தரத்தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- அனுமதித்த அளவை விட குறைவான துப்புரவுப் பணியாளர்கள் இருக்கும்பட்சத்தில், மிகை செலவினம் ஏற்படாத வகையில் சுய உதவிக் குழுவினரை பயன்படுத்திக் கொள்ளலாம்.

- கழிவுநீர் தேங்காமல் கண்காணித்தல் வேண்டும்.
- கொசுத் தொல்லையை ஒழித்திட, மாவட்ட சுகாதாரத்துறை துணை இயக்குநர்/ மாவட்ட மலேரியா ஒழிப்பு அலுவலருடன் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
- மாவட்ட சுகாதாரத்துறை துணை இயக்குநரால் அரசு மூலம் வழங்கும் லார்விசைடு (Larvicide) வாங்கி பயன்படுத்த வேண்டும்.
- பொதுக் கழிப்பிடங்கள் சுத்தமாக பராமரிக்கப்பட வேண்டும்.
- பிளீச்சிங் பவுடர், பினாயில் ஆகியவை அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில்தான் வாங்கப்பட வேண்டும்.
- மக்கள் நல்ல உடல் நலத்துடன் வாழ கழிவு மேலாண்மைப் பணிகள் அவசியம். அதிலும் நன்கு திட்டமிட்டு மேலாண்மை செய்தல் மிகவும் அவசியம்.
- திடக்கழிவுகளை அவை உற்பத்தி ஆகும் இடங்களிலேயே மக்கும் கழிவு, மக்காத தன்மையுள்ள கழிவு என தரம்பிரித்து, தனித்தனியாக சேகரம் செய்யப்படவேண்டும்.
- தரம்பிரித்து கழிவுகளைக் கையாளலாம் மற்றும் சேகரம் செய்யும் முறை குறித்து பொதுமக்கள் நன்கு அறிந்து விரைந்து செயல்பட விழிப்புணர்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
- பொது இடங்களில் ஏற்படும் கலவை குப்பைகளை குறிப்பிட்ட இடைவெளிகளில் அகற்றுதல் வேண்டும்.



- மக்கும் தன்மையுள்ள குப்பைகளை உரமாக்குதல் மற்றும் மக்காத தன்மையுள்ள குப்பைகளை மறுசுழற்சி செய்தல் வேண்டும்.
- ஒவ்வொரு வீட்டிலிருந்தும் தரம்பிரிக்கப்பட்ட குப்பைகளை நேரடியாக பெறத்தக்க ஏற்பாடுகள் செய்தல் வேண்டும்.
- கழிவு மேலாண்மைப் பணிகளில் சுயஉதவிக் குழுக்கள், தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றின் சேவைகளைப் பெறுதல் வேண்டும்.
- தள்ளுவண்டி/ மிதிவண்டி மூலம் ஒவ்வொரு வீட்டிலும் பெறப்படும், தரம் பிரித்த குப்பைகளை, லாரி/ டிராக்டர் மூலம் பெற்றுச் செல்ல இரண்டாம் சேகரிப்பு மையங்கள் (Secondary Collection Point) ஏற்படுத்தி, தள்ளுவண்டி/மிதிவண்டிகள் மற்றும் அவற்றின் பராமரிப்பாளர், நீண்ட தூரம் தேவையின்றி பயணிப்பதை தவிர்த்தல் வேண்டும்.
- கழிவுகளை தரம்பிரிக்கும் கூடம், உரத்தயாரிப்பு கூடம், மக்காத கழிவுகளை தரம் பிரித்து மறு சுழற்சிக்கு அனுப்ப வேண்டிய ஏற்பாடுகளை மேற்கொள்ளும் கூடம், இருப்பு வைப்புக் கூடம் ஆகிய வசதிகளுடன் கூடிய உரத்தயாரிப்பு கூடம் அமைத்தல் மற்றும் தர வளாகத்தை அழகுற பராமரித்தல் வேண்டும்.
- உரிய வழிமுறைகளைக் கையாண்டு, தரமான உரம் தயாரித்தல் வேண்டும்.
- மண்புழு உரம் தயாரித்தல் வேண்டும்.
- கழிவுநீர்க் கால்வாய்களை குறிப்பிட்ட இடைவெளியில் சுத்தம் செய்தல் மற்றும் கிருமி நாசினி தெளித்தல் வேண்டும்.

- அபாயகரமான கழிவுகளை அவற்றிற்குரிய நடைமுறைகளை பின்பற்றி கவனமாகக் கையாளுதல் மற்றும் அழித்தல் வேண்டும்.
- மருத்துவக் கழிவுகளை அந்தந்த மருத்துவமனைகளே முவு செய்து கொள்தல், கண்காணித்தல் மற்றும் தவறு செய்யும் மருத்துவமனைகள் மற்றும் தனிநபர்கள் மீது உரிய நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
- திடக்கழிவு மேலாண்மைப் பணிகளுக்கு பயன்படுத்தும் வாகனங்களுக்கு உரிய பணி அட்டவணை தயாரித்தல் மற்றும் அதனை பின்பற்றுதல்- வாகனங்களுக்கு எண்கள் இட்டு பராமரித்தல் வேண்டும்.

## வேலைகள்:

- பேரூராட்சிகளின் வளர்ச்சிக்காக என்னென்ன வளர்ச்சிப் பணிகள் தேவை என திட்டமிட்டு, ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்தினை தயாரித்து அதன்படி திட்டப்பணிகள் மேற்கொள்ளலாம்.
- பேரூராட்சிகளில் பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்கள், பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத் துறையில் பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்களிடம் ஒப்பந்தப்புள்ளி பெற்று இறுதி செய்யலாம்.
- திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி விதிகள் 2000 தவறாமல் கடைப்பிடிக்க வேண்டும்.
- ஒப்பந்தப் பத்திரத்தில், உரிய நிபந்தனைகள் நிர்ணயிக்கப்பட வேண்டும்.
- குறித்த காலத்தில் வேலை முடிக்கப்பட்டு, சொத்துக்கள் பதிவேட்டில் உரிய பதிவு மேற்கொள்ளப்பட வேண்டும்.



## உள்ளாட்சி உதவித் திட்டம் :

- சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் எல்லைக்குட்பட்ட உள்ளாட்சிகள் மட்டுமே தகுதியுடையவையாகும்.
- திருவள்ளூர் மற்றும் காஞ்சீபுரம் மாவட்டங்களில் உள்ள சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமப் பகுதியில் உள்ள பேரூராட்சிகள் தகுதி வாய்ந்தவை ஆகும்.
- சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் செலவினத்தில் 90% மானியம் அல்லது 10.00 இலட்சம் இதில் எது குறைவோ அத்தொகை மானியமாக வழங்கப்படும்.
- பேரூராட்சி 10% செலவினம் மேற்கொள்ள வேண்டும்.
- சாலைகள், பொது சுகாதாரத்துறை, குடிநீர் விநியோகத்திற்குத் தேவையான டேங்கர் லாரி/ டிப்பர் லாரி, டிராக்டர் மற்றும் டிரெய்லர் வாங்கப்படலாம்.

## சமுதாய அடிப்படையிலான சுற்றுப்புற சூழல் அபிவிருத்தித் திட்டம் (CBED):

- சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமப் பகுதியிலுள்ள பேரூராட்சிகள் மட்டுமே தகுதியானவை.
- செலவினத்தில் 80% மானியம், 10% பேரூராட்சி, 10% பொதுமக்கள் பங்களிப்பு.
- பூங்கா அமைத்தல், மயான அபிவிருத்தி, மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு, மழைநீர் வடிகால் அமைத்தல் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டம் போன்ற வேலைகள் மேற்கொள்ளலாம்.



## பூங்கா மற்றும் விளையாட்டு மைதானங்கள் அமைத்தல் :

- நகரக / ஊரக அமைப்புத்துறையினால் (DTCP) முழு மானியமாக ரூ. 2.50 லட்சம் வழங்கப்படுகிறது.
- சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமப் பகுதிகள் (CMDA) தவிர ஏனைய பேரூராட்சிகள் தகுதியுடையவை ஆகும்.
- பேரூராட்சிகளுக்கு சொந்தமான இடங்களில் பூங்கா மற்றும் விளையாட்டுத் திடல் அமைத்து பயனடையலாம்.

## தனிநபர் கழிப்பறை கட்டித்தரும் திட்டம் :

- பயனாளிகள் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளவர்கள்.
- குடும்பக்கார்டுகள் வைத்திருக்க வேண்டும்.
- சொந்த வீடு இருக்க வேண்டும்.
- மானியமாக ரூ.1000/- வீதம் குடும்பத்திற்கு கழிப்பறை கட்ட வழங்கப்படுகிறது.

## சிறு மற்றும் நடுத்தர நகர உட்கட்டமைப்பு வளர்ச்சித் திட்டம் :

- டுபிட்கோ (TUFIDCO) இத்திட்டத்திற்கு நோடல் ஏஜென்சி (Nodal Agency) ஆகும்.
- குடிநீர் வசதி, பாதாள சாக்கடை, திடக்கழிவு மேலாண்மைத் திட்டம், மழைநீர் வடிகால் அமைத்தல் மற்றும் சாலைப் பணிகள் மேற்கொள்ளலாம்.




- செலவினத்தில் 80% மத்திய அரசு மானியம், 10% மாநில அரசு மானியம், 10% பேரூராட்சி பங்குத் தொகை என்ற வீதத்தில் மேற்கொள்ளப்படலாம்.

## ஜவகர்லால் நேரு தேசிய நகர புனரமைப்புத் திட்டம் (JNNURM):

- சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் எல்லையில் உள்ள 20 பேரூராட்சிகள் (காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டம்), கோயம்புத்தூர் மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள 20 பேரூராட்சிகள் மற்றும் மதுரை மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள 5 பேரூராட்சிகள் தகுதியுடையவை ஆகும்.
- இத்திட்டம் 2005-06 முதல் 2011-12 முடியவுள்ள காலத்தில் செயல்படுத்தப்படும்.

## நகர்ப்புற ஏழைகளுக்கு அடிப்படை வசதிகள் திட்டம் (BSUP) :

- நகர்ப்புற ஏழைகளுக்கு அடிப்படை திட்டத்தில் மத்திய மற்றும் மாநில அரசின் மானியம் முறையே 50% மற்றும் 50%.



## ஒருங்கிணைந்த வீடுகள் மற்றும் குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் (IHSDP) :

- குடிசைப்பகுதிகள் அனைத்தும், தளவீடுகள் மற்றும் கூட்டு வீடுகளாக கட்டித்தரப்படும்.
- குடிசைப்பகுதிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்படும்.

- நிதி பங்கீடு : மைய அரசு மானியம் மற்றும் மாநில அரசு மானியம் + பயனாளி பங்குத் தொகை முறையே 80% மற்றும் 20% ஆகும்.

## நகரமைப்பு

- கட்டிட வரைபடங்கள் அனுமதித்தல்.
- முறைப்படுத்துதல்
- உள்ளூர் திட்டக் குழுமத்தின் உதவியுடன் நகர்ப்புற வளர்ச்சிகளை கண்காணித்தல்.

## பேரூராட்சிகளின் வருமானம் மற்றும் செலவின விபரங்கள் பின்வருமாறு :

### வருமானம் (Income) :

1. சொத்து வரி
2. தொழில் வரி
3. காலிமனை வரி
4. 2-சி மர வரி
5. குடிநீர் கட்டணம்
6. உரிமங்கள்
7. குத்தகை/ வாடகை
8. வட்டி வரவுகள்



9. முத்திரை கட்டணம் (SSD)
10. கேளிக்கை வரி (ET)
11. மாநில பகிர்வு நிதி
12. கட்டிட உரிமம்
13. பிறப்பு இறப்பு பதிவுக் கட்டணம்
14. கனிமங்களின் குவாரி கட்டணம்
15. ஆக்கிரமிப்பு கட்டணம்
16. கடன்கள்/மானியம்

### செலவினம்

1. ஊதியம்/ ஓய்வூதிய பங்குத் தொகை
2. வேலைகள்
3. குடிநீர் பராமரிப்பு
4. தெருவிளக்குகள் பராமரிப்பு
5. பொது சுகாதார பராமரிப்பு
6. மன்ற உறுப்பினர் அமர்வுக் கட்டணம்
7. நிர்வாக சில்லரை செலவினங்கள்
8. கடன்கள் திரும்ப செலுத்துதல்
9. மின்கட்டணங்கள்

## வரிவசூல் முறை:

- சொத்துவரி, காலிமனைவரி மற்றும் தொழில்வரி ஆகியவை அரசு/ பேரூராட்சி மன்றத்தால் தீர்மானிக்கப்பட்ட வீதத்தில் நிர்ணயிக்கப்பட வேண்டும்.
- விடுதல்கள் இன்றி அனைத்து வீடுகளுக்கும் வரிவிதிக்க வேண்டும்.
- வரிவசூலர்/ இளநிலை உதவியாளர் மூலம் உரிய சொத்துவரி/ தொழில்வரி ரசீதுகள் மூலம் வசூலிக்கப்பட வேண்டும்.
- வசூல்பணி முனைப்புடன் மேற்கொண்டு நிலுவையின்றி வசூலிக்கப்பட வேண்டும்.
- செயல் அலுவலர், வசூல் முறையாக பேணப்படுவதை கண்காணிக்க 5% நேரடி ஆய்வு செய்யப்பட்டு உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.
- வசூல் நேரங்களில் மன்ற உறுப்பினர்கள், பேரூராட்சி வசூல் பணியாளர்களுக்கு உதவி, தத்தம் பகுதிகளில் நிலுவையின்றி வரி வசூலிக்கப்பட்டது என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

## பேரூராட்சியின் கணக்கு முறை:

அரசாணை எண். 87 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 5.3.2002-ன்படி அனைத்து பேரூராட்சிகளிலும் இயல்புநிலை கணக்கு முறை (Accrual Based Accounting System) கடந்த 1.4.2002 முதல் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

- ஏற்கனவே நடைமுறையிலிருந்த Cash Based Accounting System-ஐ விட முற்றிலும் மாறானது.



- அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கையுடன் (GAAP) தயாரிக்கப்பட்ட Double Entry கணக்கு முறையாகும்.
- இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் முதன்முறையாக நடைமுறைப் படுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.
- இதில் வருவாய் கணக்குகள் மற்றும் மூலதனக் கணக்குகள் ஆகிய இரு பிரிவுகள் உள்ளன.
- அனைத்து வரவு மற்றும் பற்று (Debit and Credit) ஆகியவைகளுக்கு கணக்கு குறியீட்டெண்கள் (Codification of Accounts) நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- வருமானம் குறியீட்டெண் 1001 முதல் 2000 வரை, செலவுகள் 2001 முதல் 3000 வரை, முன்பணம் சொத்துக்கள், வங்கியிருப்பு, கையிருப்பு, வரவேண்டியவை (Receivable) போன்றவை 3001 முதல் 4000 மற்றும் கடன்கள், வைப்புகள் மற்றும் கொடுபட வேண்டியவை 4001 முதல் 5000 வரை ஆகும்.
- ஆண்டுக்கணக்கில், ஐந்தொகை கணக்கு (Trial Balance), வரவு-செலவு கணக்கு (Income and Expenditure) மற்றும் ஐந்தொகை குறிப்பு (Balance Sheet) மற்றும் 1 முதல் 24 இணைப்புகள் கொண்டவை ஆகும்.
- அனைத்து சொத்துக்களும் சொத்தாக்கம் (Assetisation of all Assets) செய்யப்பட்டு ஆண்டுக் கணக்கில் காண்பிக்கப்படுகிறது.
- ஒவ்வொரு நிதி ஆண்டிற்கான அனைத்து வருமானங்கள் (வசூலித்தது மற்றும் வரவேண்டியவை) மற்றும் அனைத்து செலவினங்கள் (கொடுத்தவை-கொடுபட வேண்டியவை) கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகிறது.

- அனைத்துலக கணக்குமுறைக்கேற்ப, இயல்பு நிலை கணக்கு முறை தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகிறது.

- இம்முறையின்படி, நாளேடு (Day Book), Journal Voucher Register, பொதுப்பேரேடு (General Ledger), முன்பணப் பதிவேடு, வைப்பு பதிவேடு, கேட்பு பதிவேடு, பல்வகை கேட்பு பதிவேடு ஆகியவை முக்கியமானவை ஆகும்.

## பேரூராட்சியின் வருமானம் தரத்தக்க சொத்துக்கள் ஏலம் விடும் முறை:

- பேரூராட்சியினால் உருவாக்கப்பட்ட/ கட்டுப்பாட்டிலுள்ள பேருந்து நிலையம், கடைகள், வணிக வளாகம், திருமண மண்டபம், நாளங்காடி, வாரச்சந்தைகள், மீன்பாசி குளங்கள், பலன்தரத்தக்க மரங்கள், சாலைஓரக்கடைகள், தரைவாடகை (Floor Rent) ஆகிய இனங்கள் இதில் அடங்கும்.

- தமிழ்நாடு அரசு திறந்த வெளி ஒப்பந்தப்புள்ளி சட்டத்தில் குறிப்பிட்ட நிபந்தனைகள் மற்றும் தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 அடிப்படையில் பகிரங்க ஏலம் மூலம் குத்தகை/ வாடகை இறுதி செய்யப்பட வேண்டும்.

- குத்தகை/வாடகை இறுதி செய்யும் போது நடைமுறையிலுள்ள வாடகை வீதத்திற்கு குறையாமலும், கடந்த மூன்றாண்டுகளின் சராசரியைவிட குறைவாகவும் இருக்கக்கூடாது.

- குத்தகைதாரர் தொடர்ந்து வியாபாரம் செய்வதற்கு தனது இசைவினை தெரிவித்து, முந்தைய குத்தகை/ வாடகையைவிட 15% உயர்த்தி செலுத்த இசைவளித்தால் ஏற்கலாம்.



- ஏற்கனவே ஈட்டி வரும் வருமானத்தை விட குறைவான வீதத்தில் ஏலம் இறுதி செய்யக்கூடாது. அது வளர்ச்சியை பாதிக்கும்.

## கடன்கள் செலுத்தும் முறை :

- வளர்ச்சிப் பணிகளுக்காகவும், வருமானம் தரத்தக்க சொத்துக்கள் உருவாக்கவும் பெறப்பட்ட கடன்களை உரிய நிதி நிறுவனங்களுக்கு தவறாமல், உரிய காலத்திற்குள் திரும்ப செலுத்துதல் வேண்டும்.

- வரவு-செலவு திட்டத்தில் கடன்கள் திரும்ப செலுத்துவதற்குரிய தொகை தவறாமல் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

- தவணைகள் உரிய வட்டியுடன் திரும்ப செலுத்த வேண்டும். தண்ட வட்டி (Penal Interest) செலுத்த நேர்ந்தால் அது இழப்பாகும்.

- வட்டி வீதம் நடப்பிலுள்ள வட்டியைவிட அதிகம் எனக்கருதினால், வேறு நிதி நிறுவனத்தில் குறைந்த வட்டிக்கு கடன் பெற்று, நிதிச்சுமையை குறைக்கலாம்.

## தகவல் கோரும் சட்டம் (Right to Information Act 2005) :

- ஒவ்வொரு குடிமகனுக்கும், அலுவலக நிர்வாகம் வெளிப்படையானது மற்றும் பொறுப்புள்ளது என்பதை தெரிவிக்கும் பொருட்டு இச்சட்டம் கொண்டு வந்ததாகும்.

- இந்நிகழ்வில் நேரும் இடையூறுகளைக் களைய மைய அரசு தகவல் ஆணையம் மற்றும் மாநில அரசு தகவல் ஆணையம் செயல்படுகிறது.

- தகவல் கோருபவரது விண்ணப்பம் தமிழ்/ ஆங்கில மொழியில் இருத்தல் வேண்டும். எழுதத் தெரியாத விண்ணப்பதாரர்களுக்கு பொதுத் தகவல் அலுவலர் உரிய ஏற்பாடு செய்ய வேண்டும்.
- விண்ணப்பத்துடன் ரூ.10/-க்கான வரைவோலை/வங்கி காசோலை இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.
- தகவல்கள் ஒருவரின் உயிருக்கும், சுதந்திரத்திற்கும் தொடர்புள்ளதானால் 48 மணி நேரத்திற்குள் பதில் அளிக்க வேண்டும். அதிக பட்சமாக 5 தினங்களில் கோரிய தகவல் அளிக்கப்படவேண்டும்.
- சாதாரண இனங்களில் 30 தினங்களில் பதில் அளிக்க வேண்டும்.
- வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவராக இருந்தால் கட்டணம் ஏதும் வசூலிக்கத் தேவையில்லை.
- உரிய காலத்திற்குள் கோரிய தகவல்கள், தகவல்களின் நகல்கள் பக்கத்திற்கு ரூ. 2/- வீதம் கணக்கிட்டு வசூலித்துக் கொண்டு அளிக்கப்படலாம்.
- இச்சட்டத்தில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளை தவறாமல் கடைப்பிடிக்க வேண்டும்.

## தங்களது பேரூராட்சியை முன்மாதிரி பேரூராட்சியாக மாற்ற வேண்டாமா? - இதோ வழிமுறைகள் :

- தெரிவிக்கப்பட்டுள்ள பல்வேறு ஆலோசனைகளைப் பின்பற்றி, பேரூராட்சிப் பகுதி முழுவதையும் தூய்மையாகவும், அழகாகவும் பராமரித்திட வேண்டும்.



- பேரூராட்சி அலுவலக வளாகத்தை நன்கு பராமரிப்பதுடன் பொதுமக்கள் மிகவும் மகிழ்ச்சியுடன், விரும்பி வந்துசெல்லும்விதமாக, பொதுமக்களுடன் நட்புணர்வுடனும், நம்பகத்தன்மையுடனும் பேரூராட்சி நிர்வாகம் நடந்து கொள்ள தக்க ஏற்பாடுகளை செய்தல் வேண்டும்.
- பேரூராட்சியினால் திட்டமிடப்படும் பணிகள், செயல்பாடுகள் ஆகியவற்றினை பொதுமக்கள் அறிந்துகொள்ள வசதியாக அவர்களுக்கு அவ்வப்போது தகவல் அளித்தல் மற்றும் உரிய வகையில் விளம்பரப்படுத்துதல்-தேவை ஏற்படின் குறிப்பிட்ட இடைவெளிகளில் கூட்டங்கள் நடத்தி கலந்துரையாடல் மேற்கொள்ளுதல்.
- பேரூராட்சிப் பகுதியின் ஒட்டுமொத்த தேவை மற்றும் வளர்ச்சி குறித்து பொதுமக்கள், தொழில் நுட்ப வல்லுநர்கள், தன்னார்வத்தொண்டு நிறுவனங்கள் மற்றும் இதர முக்கிய பிரமுகர்கள் ஆகியவர்களை கலந்தாலோசித்து, ஒரு ஒட்டுமொத்த வளர்ச்சித் திட்டம் தயாரித்தல்-பேரூராட்சி நிர்வாகத்தால், வழங்கப்படக்கூடிய பணிகள் மட்டும் அடங்கிய திட்டமாக இது இருக்கக்கூடாது. தேவைப்படும் அனைத்து வளர்ச்சிப் பணிகளையும் குறிப்பிடும், ஒருங்கிணைந்த நகர வளர்ச்சித் திட்டமாக இது இருக்க வேண்டும்.
- ஒருங்கிணைந்த நகர வளர்ச்சித் திட்ட வகைப்பாட்டிற்கு தேவைப்படும் மொத்த நிதி, திட்டங்கள் நிறைவேற்றப்படக்கூடிய கால அளவு, தேவைப்படும் நிதி ஆதாரங்களை திரட்டுவதற்குரிய வழிமுறைகள், பெறப்பட வேண்டிய பல்வேறு துறைகள், நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் குறித்த விபரங்களை துல்லியமாகக்

கணக்கிட்டு, அவற்றினைப் பெற எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் என்னென்ன என்பதை நன்கு திட்டமிட வேண்டும்.


- ஒருங்கிணைந்த நகர வளர்ச்சித் திட்டத்தினை செயல்படுத்த, பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டு திட்டவட்டமான பணிகள், குழுக்களுக்கு பகிர்ந்தளிக்கப்படவேண்டும்.
- சட்டமன்ற/ நாடாளுமன்ற உறுப்பினர்களது ஒத்துழைப்பு மற்றும் நிதி உதவிகள் பெறப்படவேண்டும்.
- குழுவினர் தங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட பணிகள் தொடர்புடைய அலுவலர்கள், நிறுவனங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அனைவரையும் தொடர்பு கொண்டு, தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பணிகளை செவ்வனே நிறைவேற்ற வேண்டும். இவ்வாறு அனைத்துக் குழுக்களும் பணிகளை நிறைவேற்றும் பட்சத்தில் திட்டமிட்ட வளர்ச்சி தானாகவே அடையப்பெறும்.

### பேருந்து நிலையங்கள் பெருமைபடத்தக்க பராமரிப்பு - சில ஆலோசனைகள்

- பேருந்து நிலைய வளாகம் இரவு பகல் எந்த நேரத்திலும் சுத்தமாக இருக்குமாறு பார்த்துக்கொள்ளப்பட வேண்டும்.
- கழிவறைகள் மிக சுத்தமாக எந்நேரமும் பராமரிக்கப்பட வேண்டும்.
- சுத்தமான குடிநீர் எந்நேரமும் கிடைக்கப்பெற ஆவண செய்ய வேண்டும்.



- பேருந்து நிலைய வளாகத்தின் உள்ளேயும், பேருந்து நிலையத்தைச் சுற்றிலும் போதுமான அளவில் விளக்கு வசதி செய்யப்பட்டிருக்கப்பட வேண்டும்.
- பயணிகள், குறிப்பாக பெண் பயணிகள் தனியாகவும் பயமின்றியும் தங்கும் வகையில் பராமரிப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கப்பட வேண்டும்.
- தேவையான அளவில் இருக்கை வசதிகள் செய்து தரப்பட்டிருக்கப்பட வேண்டும்.
- பேருந்து கால அட்டவணை குறித்த பலகைகள், பயணிகள் தங்குமிடத்திலும், நுழைவு வாயில்களிலும், பொதுமக்கள் கண்களில் தென்படும் இடத்தில் எளிதாகப் படிக்கும் அளவில் வைத்திருக்கப்படவேண்டும்.
- பேரூராட்சியின் முக்கிய பகுதிகளை குறிக்கும் வரைபடம், பேரூராட்சி பகுதிகளில் உள்ள சிறப்புகளை விளக்கும் தகவல்கள் அடங்கிய பலகைகள் முதலியன பயணிகள் தங்குமிடத்திலும், பொதுமக்கள் கண்களில் தென்படும் இதர இடங்களிலும் வைக்கப்பட வேண்டும்.
- திருக்குறள், நல்ல கருத்துருக்கள், பைந்தமிழ் பாடங்கள், சிறப்புமிகு சொற்றொடர்கள் ஆகியவற்றை சுவர்களில் பதிவு செய்யலாம்.



### முக்கிய திருக்கோயில், சுற்றுலா, வணிக மற்றும் தொழில் முக்கியத்துவம் உள்ள நகரமானால் ...

- தங்களது பேரூராட்சிப் பகுதியில் அமைந்துள்ள முக்கிய திருக்கோயிலின் தலவரலாறு, முக்கிய விழாக்கள், அந்த ஊரினை அடையும் சாலை மற்றும்

ரயில் வழிகளைக் குறிக்கும் விபரங்கள் ஆகியவை குறித்து அனைவரும் அறியும் வகையில் தகவல் பலகைகள் முக்கிய இடங்களில் வைத்திடல் வேண்டும்.

- திருக்கோயில் / சுற்றுலா முக்கியத்துவம் அமைந்துள்ள பகுதிகளில் நல்ல தூய்மையான சூழலை ஏற்படுத்துதல் மற்றும் போதுமான அளவில் விளக்கு வசதி, குடிநீர் வசதி, துப்புரவு வசதி ஆகியவற்றை ஏற்படுத்தித் தருதல்.

- வெளியூரிலிருந்து வந்து செல்லும் பொதுமக்களுக்குரிய அடிப்படை வசதிகளான குடிநீர் மற்றும் சுகாதாரமான சூழலை ஏற்படுத்தித் தருவதுடன் அந்த ஊரில் உள்ள பேருந்து/ரயில் விபரங்கள், உணவு விடுதிகள், தங்குமிடங்கள் முதலிய விபரங்களை அறிந்து கொள்ள வசதியாக தகவல் பலகைகளை முக்கிய இடங்களில் அமைத்தல்.

- இடவசதி இருப்பின் பூங்காக்கள் அமைத்தும், சாலை ஓரங்களில் மரங்கள், பூச்செடிகள் அமைத்தும் மற்றும் இதர அழகூட்டும் நடவடிக்கைகள் மேற்கொண்டும் பேரூராட்சிப் பகுதிகளை, குறிப்பாக பேருந்து/ ரயில் நிலையங்களிலிருந்து முக்கிய பகுதிகளுக்குச் செல்லும் சாலைகள்/ தெருக்கள் சந்திப்புகள் ஆகியவற்றை அழகுற பராமரித்தல்.

- குப்பைகள் மற்றும் கழிவுகளை சாலை மற்றும் தெருக்களில் போடுவதை தவிர்க்க முக்கிய இடங்களில் அழகான குப்பை தொட்டிகள் வைப்பதுடன் அவற்றை குறிப்பிட்ட கால இடைவெளிகளில் அப்புறப்படுத்த தனி ஏற்பாடுகள் செய்தல்.



## தனியார் பங்களிப்புப் பணிகள்:

- பேரூராட்சிப் பகுதியின் வளர்ச்சி, அழகுபடுத்தும் பணி, அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் பணி ஆகியவற்றிற்கு தனியார் நிறுவன பங்களிப்பு பெற பெருமளவில் வாய்ப்பு உள்ளது.

- உள்ளூரில் உள்ள வங்கிகள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், முக்கிய வணிக நிறுவனங்கள், முக்கிய பிரமுகர்கள் ஆகியோர்களது உதவி பெற்று அவர்களது பங்களிப்புடன் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளலாம் :
  - பூங்கா/ சிறுவர் பூங்கா/ சிறுவர் விளையாடுமிடம் அமைத்தல் மற்றும் பராமரித்தல்.
  - சாலை/ தெரு ஓர பூங்கா அமைத்தல் மற்றும் பராமரித்தல்.
  - தெருப்பெயர் பலகைகள் அமைத்தல்.
  - போக்குவரத்து சந்திப்பில், அழகான நீரூற்று, சிறு பூங்கா அமைத்தல் மற்றும் பராமரித்தல்.
  - சமுதாய கூடம் அமைத்தல்.

## சுடுகாடு / இடுகாடு பராமரிப்பு

- சுடுகாடு மற்றும் இடுகாடுகளை நன்கு பராமரிப்பது நம் முன்னோர்களுக்கு நாம் செய்யும் மரியாதையாகும்.

- சுடுகாடு/இடுகாடு பகுதியைச் சுற்றி சுற்றுச்சுவர் அமைத்தல் அவசியம்.
- முட்செடிகள்/புதர் நிறைந்த பகுதியாக வைத்திருக்காமல் அழகு மிளிரும் வளாகமாக அப்பகுதி மேம்படுத்தப்பட்டு பராமரிக்கப்படவேண்டும்.
- தேவையான அளவில் மின்விளக்கு வசதி ஏற்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.
- தேவையான அளவில் தண்ணீர் வசதி ஏற்படுத்தி வைக்கப்பட வேண்டும்.
- அணுகுசாலைகள் அமைத்து அவற்றை நன்கு பராமரிக்க வேண்டும்.
- உடல்களை சுமந்து செல்லும் வண்டிகளை, பொதுமக்களுக்கு மிகக்குறைந்த வாடகையில் கிடைக்க ஏற்பாடு செய்யலாம்.

## நல்ல நிதி மேலாண்மைக்குரிய வழிவகைகள்

- வரி விதிப்பு/உரிம கட்டண வசூல்/சந்தை மற்றும் வணிக வளாகங்களது வருவாய் ஆகியவற்றில், சிறு அளவு கூட இழப்பு ஏற்படாமல் விழிப்புடன் கண்காணித்தல்.
- தேவையற்ற செலவினங்களைத் தவிர்த்தல்.
- மின்விளக்கு/ குடிநீர்/பொது சுகாதார பராமரிப்புக்கு நல்ல தரமான பொருட்களை பயன்படுத்துவதன் மூலம் மிகை செலவினங்களைத் தவிர்த்தல்.
- பொருட்களுக்கான விலை விகிதம் உள்ளூர் நிலவரத்திற்கு ஏற்ப உள்ளதா? என சரிபார்த்து உறுதி செய்தல்.



- பணியாளர் மற்றும் அலுவலக நிர்வாக செலவினங்களை நிர்ணயிக்கப்பட்ட வருவாய் கணக்கு (சாதாரணம்) தலைப்பில் 49%க்குள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
- மாநில கணக்காயர் மற்றும் உள்ளாட்சி நிதித் தணிக்கை அலுவலர்களால் சுட்டிக்காட்டப்படும் குறைபாடுகளை உடனுக்குடன் நடவடிக்கை எடுத்து அவற்றை நீக்குதல் வேண்டும்.
- தணிக்கையில் சுட்டிக்காட்டப்படும் குறைபாடுகளை ஆலோசனைகளாக ஏற்றுக் கொண்டு மீண்டும் நேராமல் விழிப்புடன் செயல்படுதல் வேண்டும்.
- கடன் தவணை தொகைகளை, நிர்ணயிக்கப்பட்ட கால அளவுக்குள் நிலுவையின்றி செலுத்தி, தண்ட வட்டி/அபராதம் போன்றவற்றை தவிர்த்தல் வேண்டும்.
- மின் கட்டணங்களுக்கான கேட்பு பயன்பாட்டு அளவுக்குள் உள்ளதா என்பதை சரிபார்த்தல் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் செலுத்துதல் வேண்டும்.

## சந்தை பராமரிப்பு - சத்தான ஆலோசனைகள்

- வாரச்சந்தை வளாகங்கள் சந்தை நாட்களில் மட்டுமல்லாது அனைத்து நாட்களிலும், சுத்தமாக இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.
- வாரச்சந்தை வளாகங்களில் குடிநீர், விளக்கு வசதி மற்றும் கழிவறை வசதிகள் நல்லமுறையில் செய்து தரப்பட வேண்டும்.

- தினசரி சந்தை மற்றும் சாலை ஓர அங்காடிகள் வளாகங்கள் சுத்தமாக இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

- சந்தை வளாகங்களில் ஏற்படும் பழுதுகள் உடனுக்குடன் நீக்கப்பட்டு, பொலிவுடனும் தூய்மையுடனும் இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

- அங்கீகரிக்கப்பட்ட கட்டண விகிதங்களைக் குறிப்பிடும் அறிவிப்புப் பலகைகள் சந்தை வளாக நுழைவு வாயிலிலும், இதர முக்கிய இடங்களிலும் நிறுவப்பட வேண்டும்.

- கட்டணம் வசூலிக்கப்பட அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் பெயர், முகவரி மற்றும் ஒப்பந்த காலம் ஆகியன குறித்து தெளிவாக அறிவிப்புப் பலகை சந்தை வளாகத்தில் நிறுவப்பட்டிருக்க வேண்டும்.

- ஒப்பந்தக்காரர் வழங்கும் கட்டண இரசீது குறித்த கணக்கு மற்றும் இரசீதுகள் அடிக்கடி சரிபார்க்கப்பட வேண்டும்.

- பேரூராட்சி நிர்வாக அலுவலரிடம் சரிபார்த்தலுக்காக காண்பித்து ஒப்புதல் பெறப்படாத இரசீதுகளை ஒப்பந்தக்காரர் பயன்படுத்துகிறாரா? என்பது குறித்து சோதனை செய்து, உறுதி செய்யப்பட வேண்டும்.

## பேரூராட்சி அலுவலகம் - செம்மையான பராமரிப்பு

- அலுவலக வளாகத்தை எப்போதும் தூய்மையாகவும், அழகாகவும் வைத்திருத்தல் வேண்டும்.



- பூச்செடிகள் மற்றும் அலங்காரப் பொருட்களை பாங்குற அமைத்து மனதுக்கு இதமான சூழ்நிலையில் அலுவலக வளாகத்தை பராமரித்தல் வேண்டும்.

- அலுவலக முகப்பில், பிறப்பு இறப்பு பதிவு, குடிநீர் இணைப்பு உரிமங்கள் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைமுறைகள் தொடர்பான நடைமுறைகளை விளக்கும் அறிவிப்புப் பலகைகளை அழகுற அமைத்து, எளிதில் காணத்தக்க இடங்களில் வைத்திருத்தல் வேண்டும்.

- முக்கிய இடங்களைக் குறிப்பிடும் பேரூராட்சியின் வரைபடம் வைத்திருத்தல் வேண்டும்.

- பணியாளர்கள் இருக்கைகள், சட்டங்கள் ஆகியவற்றை அழகுற அமைத்து பராமரித்தல் வேண்டும்.

- பொதுமக்கள் தங்களது குறைகளைப் பதிவு செய்ய வசதியாக, புகார் புத்தகம் எளிதில் காணத்தக்க வகையில் வைத்திருத்தல் வேண்டும்.


- பதிவு செய்யப்படும் புகார்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுத்தல் மற்றும் சம்பந்தப்பட்டவருக்கு தகவல் அளித்தல் வேண்டும்.

- பேரூராட்சி அலுவலகத்திற்கு வரும் பொதுமக்களிடம், இனிமையாகவும் நட்புணர்வுடனும் பழகுதல் வேண்டும்.

- அனைத்துப் பணியாளர்களுக்கும், அவர்களுக்குரிய கடமைகள் மற்றும் பொதுமக்கள் குறித்து திட்டவட்டமான பணி அட்டவணை (job chart) தயாரித்து

அதன்படி செயல்படுதல் மற்றும் அதன் விவரங்கள் குறித்து எளிதில் கண்களில் படும் இடங்களில் பதிவு செய்து வைத்திருத்தல் வேண்டும்.

- அனைத்துப் பணியாளருக்கும் அடையாள அட்டை வழங்கப்படுவதுடன் அவற்றை அவர்கள் தங்கள் பணி நேரத்தில் கட்டாயமாக அணிந்திருத்தலை உறுதி செய்தல்.
- ஆவணங்களையும் பதிவேடுகளையும் அழகாகவும் நேர்த்தியாகவும் பராமரித்தல் வேண்டும்.
- பேரூராட்சி அலுவலகத்தை தொடர்பு கொள்ளும் மின்னஞ்சல் முகவரி (E-mail address) மற்றும் வலைத்தள முகவரி (web address) ஆகியவற்றை எளிதில் காணத்தக்க இடங்களில் பதிவு செய்து வைத்திருத்தல் வேண்டும்.



## பேரூராட்சிகளில் கணினி மயமாக்குதல் :

தமிழ்நாட்டில் உள்ள 561 பேரூராட்சிகளும் 16 மண்டலங்களாக பிரிக்கப்பட்டு நிர்வகிக்கப்படுகின்றன. இந்த 16 மண்டல உதவி இயக்குநர் அலுவலகங்களையும், 561 பேரூராட்சி அலுவலகங்களையும் கணினி மயமாக்க திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்-IIன் கீழ் அனைத்து பேரூராட்சிகளுக்கும் ஒரு கணினி வீதம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டத்தின் கீழ் பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் மற்றும் சான்று வழங்கும் பணிக்கான சேவை மென்பொருள் பொருத்தப்பட்டு கணினியில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றன.



பேரூராட்சிகள் இயக்ககத்தின் வலைதள முகவரி **http://www.tn.gov.in/dtp**

தற்போது கணினி மயமாக்கல் திட்டத்தின் கீழ் பின்வரும் சேவைகள் அறிமுகப்படுத்தப்பட உள்ளன :

- பேரூராட்சிகளில் வசூலிக்கப்படும் சொத்துவரி, தொழில்வரி, குடிநீர் கட்டணம் மற்றும் வரியில்லாத இனங்களுக்கான சேவைகளை கணினி மயமாக்குதல்.
- அனைத்து ஒப்பந்தப்புள்ளிகளையும் 01-04-2007 முதல் இணையதளம் வாயிலாக ஒப்பந்தப்புள்ளிப் படிவங்கள் பெற வழிவகை செய்தல். ஒரு மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்ததாரர் பிற மாவட்டங்களிலும் ஒப்பந்தப்புள்ளி கோரும் வகையில் அவர்களது பெயர்ப் பட்டியலை இணையதளத்தில் வெளியிடுதல்.
- ஒவ்வொரு பேருராட்சிக்கும் வலைதளம் உருவாக்கி அதில் பேரூராட்சிகள் தொடர்பான பொது விபரங்களை பின்வரும் வலைதள முகவரியில் வெளியிடுதல் : **http://townpanchayats.tn.gov.in**
- சென்னை மாநகர வளர்ச்சிக் குழுமத்தின் எல்லைக்குட்பட்ட 20 பேரூராட்சிகளில் முதற் கட்டமாகவும், இரண்டாம் கட்டமாக சுற்றுலா தலங்கள், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நகரங்கள் அடங்கிய 100 க்கும் மேற்பட்ட பேரூராட்சிகளிலும் "தொடுதிரை கணினி தகவல் மையம் அமைத்திடுதல்".
- பேரூராட்சி நிர்வாகத்தின் நிதி நிலை விபரங்கள், வளர்ச்சித் திட்டங்களின் முன்னேற்ற அறிக்கைகள், மக்கள் பிரதிநிதிகளின் விபரங்கள், மக்கள் தொகை,

பேரூராட்சிகளில் பராமரிக்கப்படும் சாலைகள், தெரு விளக்குகள், குடிநீர் வழங்கல், பொது சுகாதாரம் மற்றும் பேரூராட்சிகளின் சொத்து விபரங்கள் ஆகியவற்றை கணினி மூலமே பெறுவதற்கான மென்பொருள்களை பொருத்துதல்.

இடம் சென்னை

நாள் 14-3-2007

பேரூராட்சிகள் இயக்ககம்



## பேரூராட்சிகளின் எண்ணிக்கை

| வ.எண். | மண்டலம் | மாவட்டம் | பேரூராட்சிகளின் எண்ணிக்கை | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | சிறப்பு நிலை | தேர்வு நிலை | முதல் நிலை | இரண்டாம் நிலை | மொத்தம் |
| 1 | காஞ்சிபுரம் | 1. காஞ்சிபுரம் | 1 | 10 | 9 | 4 | 24 |
| 2 | திருவள்ளூர் | 2. திருவள்ளூர் | - | 8 | 5 | - | 13 |
| 3 | வேலூர் | 3. காஞ்சிபுரம் | - | 14 | 8 | - | 22 |
| | | 4. திருவண்ணாமலை | - | 4 | 3 | 3 | 10 |
| 4 | தருமபுரி | 5. தருமபுரி | - | 8 | 2 | - | 10 |
| | | 6. கிருஷ்ணகிரி | - | 6 | - | 1 | 7 |
| 5 | சேலம் | 7. சேலம் | - | 15 | 14 | 4 | 33 |
| | | 8. நாமக்கல் | - | 10 | 8 | 1 | 19 |
| 6 | ஈரோடு | 9. ஈரோடு | - | 22 | 21 | 10 | 53 |
| 7 | கோயம்புத்தூர் | 10. கோயம்புத்தூர் | 1 | 20 | 20 | 11 | 52 |
| 8 | உதகமண்டலம் | 11. நீலகிரி | 1 | 6 | 4 | - | 11 |
| 9 | கடலூர் | 12. கடலூர் | 1 | 8 | 5 | 2 | 16 |
| | | 13. விழுப்புரம் | - | 10 | 4 | 1 | 15 |
| 10 | தஞ்சாவூர் | 14. தஞ்சாவூர் | - | 11 | 7 | 4 | 22 |
| | | 15. நாகப்பட்டிணம் | 1 | 2 | 5 | - | 8 |
| | | 16. திருவாரூர் | - | 4 | 3 | - | 7 |
| 11 | திருச்சி | 17. திருச்சி | - | 7 | 10 | - | 17 |
| | | 18. பெரம்பலூர் | - | - | 2 | 4 | 6 |
| | | 19. புதுக்கோட்டை | - | 5 | 3 | - | 8 |
| 12 | திண்டுக்கல் | 20. திண்டுக்கல் | 1 | 13 | 8 | 2 | 24 |
| | | 21. கரூர் | 1 | 3 | 5 | 2 | 11 |
| 13 | மதுரை | 22. மதுரை | - | 7 | 5 | - | 12 |
| | | 23. தேனி | - | 12 | 6 | 4 | 22 |
| 14 | சிவகங்கை | 24. இராமநாதபுரம் | - | 1 | 3 | 3 | 7 |
| | | 25. விருதுநகர் | - | 2 | 4 | 3 | 9 |
| | | 26. சிவகங்கை | - | 4 | 7 | 1 | 12 |
| 15 | திருநெல்வேலி | 27. திருநெல்வேலி | 4 | 12 | 16 | 4 | 36 |
| | | 28. தூத்துக்குடி | 1 | 11 | 4 | 3 | 19 |
| 16 | கன்னியாகுமரி | 29. கன்னியாகுமரி | 1 | 10 | 30 | 15 | 56 |
| | | மொத்தம் | 13 | 245 | 221 | 82 | 561 |